# வேலைக்குச் செல்லும் பெண்களின் மீது இரட்டை வகிபாகம் ஏற்படுத்தும் பிரச்சினைகள்: கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவை மையப்படுத்திய ஒரு சமூகவியல் ஆய்வு

**Supervisor**
*Mrs. AWF. Naleefa,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts and Culture*

**Researcher**
*Miss. NL. Fahmiya,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts and Culture*

மனிதன் தனது பொருளாதார ரீதியான தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வேலை செய்து வருமானம் பெற்றுக் கொள்வது இன்றியமையாததாகின்றது. பொருளாதார நெருக்கடி உயர்ந்து போகின்ற இன்றைய கால கட்டத்தில் குடும்ப நிருவாகத்திற்கு கணவனின் ஊதியம் மட்டும் போதாதிருக்கின்றது.இதனால் மனைவியும் வேலைக்குச் சென்று பொருளீட்டுவது அவசியமாகின்றது.குடும்பச் சுமையைக் குறைப்பதற்காக வேலைக்குப் போகும் பெண்களுக்கு வீடு திரும்பியதும் வீட்டு வேலைகள், குழந்தை பராமரிப்பு என்று சுமை இரட்டிப்பாகின்றது.எனவேதான், கிண்ணியாப் பிரதேசத்தில் அரச,அரச சார்பற்ற துறைகளில் வேலை செய்யும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அதற்கான காரணங்களையும் இவ்வாய்வுக் கட்டுரை நோக்கியுள்ளது.கிண்ணியாப்பிரதேசத்தில வேலைக்குச் செல்லும் பெண்களின் மீது இரட்டை வகிபாகம் எத்தகைய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது, அதற்கான காரணங்கள் என்ன என்பதை அடையாளம் கண்டு அதற்கான தீர்வுகளை மும்மொழிவதனை நோக்கங்களாளக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு நுட்ப முறைகளைப் பயன்படுத்தி தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பகுப்பாய்வும் செய்யப்பட்டுள்ளது. இறுதியாக, வேலைக்குச் செல்லும் பெண்கள் குடும்ப மற்றும் சமூக ரீதியாக அதிகமான பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு இரட்டை வகிபாகம் காரணமாக அமைகின்றது என்பது இவ்வாய்விலிருந்து பெறப்பட்ட முடிவாகும்.

***Key words:*** வேலை பார்க்கும் பெண்கள்(working women) , இரட்டை வகிபாகம் (Dual roles)